மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமை தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

தஞ்சாவூரில்

மாற்றுத்திறனாளிகளு
சிறப்பு மருத்துவ முகா

தஞ்சாவூர், மார்ச் 26: தஞ்சாவூர் மேம்பாலம், காதுகேளாதோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் NIEPMD நிறுவனம் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் பயனாளிகள் தேர்வு செய்வதற்கான மதிப்பீட்டு முகாம் 4 இடங்களில் நடைபெற உள்ளது. அதில் முதற்கட்டமாக நேற்று தஞ்சாவூர் மேம்பாலம் காதுகேளாதோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. சென்னை முட்டுக்காடு பகுதியில் செயல்பட்டு தேசிய பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான (NIEPMD) நிறுவனத்தின் சார்பில் உபகரணங்கள் தேர்வு செய்வதற்கான முகாம் குழுக்கள் முகாமில் கலந்து கொண்டு பயனாளிகளை தேர்வு செய்ய உள்ளனர்.

இன்று திருவிடைமருதூர் வட்டம் ஆடுதுறை வீரசோழன் கோரி மணிமண்டப வளாகம், 27ம் தேதி பாபநாசம் சங்கமம் மஹாலில் இங்கா நகர் சாக்கோட்டை, 28ம் தேதி பட்டுக்கோட்டை வடசேரி ரோடு பகுதியில் உள்ள திரிஸ்டார் திருமண மஹாலில் நடைபெற உள்ளது. தஞ்சாவூர் மேம்பாலம், காதுகேளாதோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமை கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பார்வையிட்டார்.

25 MAR

தஞ்சாவூர் மேம்பாலம், காதுகேளாதோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமை கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தினகரியன்

26 MAR 2023

தஞ்சாவூர் மாநகராட்சி மேம்பாலம் அரசு செவித்திறன் குறையுடையோர்க்கான மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தினமணி

26 MAR 2023

மார்ச் 28-இல் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் முகாம்

பட்டுக்கோட்டை மார்ச் 25: பட்டுக்கோட்டையில் வரும் 28-ஆம் தேதி மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் முகாம் நடைபெற உள்ளதாக நகராட்சி ஆணையர் ராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

பட்டுக்கோட்டை நகரம்வார்டு எண். 6 வடசேரி ரோடு, திரிஸ்டார் மஹாலில் மாற்றுத்திறனாளிகளுக்கு NEP

வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள், பார்வையற்றோருக்கு மனவளர்ச்சி பிரெய்லி வாட்ச், காதொலி கருவி என்பன போன்ற உபகரணங்களில் அவர்களின் மாற்றுத்திறனுக்கேற்ப உபகரணங்கள் தேர்வு செய்து இரண்டு மாதங்களில் வழங்கப்படவுள்ளது.

இம்முகாமில் உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள், ஆதார் அட்டை புகைப்படம், வருமானச் சான்றிதழ், மாற்றுத் திறனாளி அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் கலந்து

ADIP Distribution Camp
@Thanjavur

26 மார்ச் 2023